# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 327/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 03.02.2026.**

| | |
|---|---|
| **Name : மாதைய்யன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காவல் உதவி ஆய்வாளர் துளசிமணி என்பவர் கடந்த 31.10.2022-ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த தனசேகரன், த/பெ.கிருஷ்ணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் விசாரணை செய்த போது நிலைய சமுதாய பதிவேட்டில் மனு ரசீது எண்.500/2022 என்ற எண்ணில் வழங்கப்பட்டு பின்னர் விசாரணை அடிப்படையில் புகார் வாக்குமூலத்தின் பேரில் வழக்கு பதிவு செய்து பின்னர் கடந்த 03.11.2022 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சம்பவ இடம் பொட்டனேரி பெரியாண்டிச்சி அம்மன் கோவில் அருகே வாதி வீட்டு காம்போன்டு அருகே சென்று சாட்சிகள் போது மற்றும் பெருமாள் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரணை செய்து காயமடைந்த தனசேகரன் மற்றும் கோமதி என்பவர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுரேந்தர் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து மேல் விசாரணைக்காக என் வசம் ஒப்படைத்தார். அதனை பெற்ற நான் மறுவாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. கடந்த 10.11.2022 ம் தேதி மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் முன்ஜாமின் பெற்றதால் கைது செய்ய மார்க்கமில்லை.

2. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 21.11.2022 ம் தேதி **u/Sec. 294(பி), 341, , 324, 506(2) IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.

3. 03.11.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு மனு ரசீது எண்.500/2022 பரிசீலனை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. சம்பவம் என்று நடந்தது என்றால் 30.10.2022 ம் தேதி 15.00 மணிக்கு நடந்தது. நான்கு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் ஆமாம். மனு ரசீதை பரிசீலனை செய்து பதியப்பட்டது. காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம்.

4. சாட்சிகளை துளசிமணி விசாரித்துள்ளார் என்றால் ஆமாம். நான் சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரித்தேன் அவரிடம் சொன்னவாறு என்னிடம் சாட்சியம் அளித்ததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. இந்த வழக்கின் வாதிக்கு இழுப்பு வருவதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சம்பவயிடம் யாருடைய இடம் என குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் வாதியின் வீட்டின் காம்போன்டு சுவர் அருகே என குறிப்பிடப்பட்டுள்ளது. காம்போன்டு சுவருக்கும் அவர் வீட்டிற்கும் இடைப்பட்ட தூரம் என்னவென்றால் 3 அடி தூரமிருக்கும். வீதியா என சரியாக எனக்கு தெரியவில்லை.

5) காம்போன்டு சுவருக்கு கிழக்கை தனசேகர் என்பவர் வீடு உள்ளதா என்றால் ஆமாம். ராஜேஷ் வீடு சம்பவயிடத்திற்கு மேற்கே உள்ளது என்றால் ஆமாம். சம்பவயிடத்திற்கு வடக்கே மண் ரோடு உள்ளது என்றால் ஆமாம். மண் ரோடு

வழியாக தான் ராஜேஷ், தனசேகர் செல்ல வேண்டுமென்றால் ஆமாம். கால்வாய் செல்கிறதா என்றால் சரியாக நினைவில்லை. சம்பவயிடத்தில் பள்ளமோ, குழியோ குறிக்கப்பட்டுள்ளதா என்றால் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்படவில்லை. ராஜேஷ், தனசேகர் இருவரும் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கும் ராஜேஷ் வீட்டு காம்போன்டிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கால்வாயை தூர்வாரிக் கொண்டிருந்தார் என்றும் நான் சரிவர விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. காயச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காயம் குறித்து மருத்துவர் கருத்துரை வழங்கவில்லை என்றால் ஆமாம். பொய்யாக புகாரை பெற்று எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஓம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**